**குழித்துறை நகர்மன்றத்தின் 29-09-2023 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சிக்கு உட்பட்ட 10-வது வார்டில் உள்ள பழைய பாலத்தில் போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தால் பல அசம்பாவிதங்கள் நடைபெறுகிறது. பாலத்தில் 7 புதிய தெருவிளக்குகள் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.607 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) மார்த்தாண்டம் கருங்கல் சாலையில் செயல்பட்டு வந்த MCC இட மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அவ்விடத்தில் நவீன வணிகவளாகம் கட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.607 (2) தீர்மானிக்கப்பட்டது.

நகர்மன்ற துணைத்தலைவர் திரு.மு.பிரபின் ராஜா கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறையில் பாலம் தொடங்கும் இடத்தின் இடதுபுறத்தில் நடந்து செல்லும் மக்களும் வாகனத்தில் செல்வோரும் குப்பைகளை வீசி எறிந்து செல்கிறார்கள். இதனால் குப்பைகள் சேர்ந்து துர்நாற்றம் வீசுகிறது. இதனால் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. ஆற்றின் கரையோரத்தில் குப்பைக் கொட்டுவதால் ஆற்றுநீரும் மாசுபடுகிறது. எனவே அந்த இடத்தில் கம்பிவேலி அமைத்து கண்காணிப்பு கேமரா பொருத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.608 தீர்மானிக்கப்பட்டது.

10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.G. ஜெயின்சாந்தி கொண்டு வரும் தீர்மானம்

1) வார்டு எண்.10-ல் உள்ள பழவார் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் தீயணைப்பு நிலையத்திலிருந்து கான்கிரீட் சாலை போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.609 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) வார்டு எண்.10-ல் குழிவிளையில் உள்ள நகராட்சி கிணறு மிகவும் பாழடைந்து தண்ணீர் அசுத்தமாக உள்ளதால் கிணற்றை தூர்வாரி சுத்தம் செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.
மன்றத்தீர்மான எண்.609 (2) தீர்மானிக்கப்பட்டது.

<u>12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கி.செ. ஜீலியட் மெர்லின் ரூத் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) தெங்கன்குழிவிளையில் பழுதடைந்து உள்ள Interlock Road-னை சரிப்படுத்த நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி தருமாறு மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.610 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) பழைய ரேஷன் கடையிலிருந்து தாணிக்காவிளை வரை உள்ள தார் சாலையை செப்பனிட்டு தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.610 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) பழைய ரேஷன் கடையிலிருந்து ஓராணிவிளை சாலையை செப்பனிட்டு தரும்படி மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.610 (3) தீர்மானிக்கப்பட்டது.

4) 12-வது வார்டில் குளத்தின் மீதும் சாலையின் மீதும் கட்டியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.610 (4) தீர்மானிக்கப்பட்டது.

<u>14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.அ. லில்லி புஷ்பம் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) குழித்துறை நகராட்சி 14-வது வார்டில் காமனாட்டு விளை சாலை நகராட்சியில் இருந்து இரண்டு முறை சாலை அமைக்கப்பட்டுள்ளது. தற்போது நகராட்சி வரைபடத்தில் அந்த சாலை விடுபட்டுள்ளது. விடுபட்ட சாலையை வரைபடத்தில் சேர்த்து பழுதடைந்த சாலையை சரி செய்து தருமாறு மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.611 தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.1</u>

குழித்துறை நகராட்சி மீது மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் குழித்துறையில் திரு. விஸ்வநாதன் என்பவர் சொத்துவரி தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு எண்.O.S.No.22/2023-க்கு நகராட்சி வழக்கறிஞர் திரு.D. ஷாஜிகுமார் வாதாடிய வகைக்கு பட்டியல் தொகை ரூ.3500/- வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்**.2104/2001/**அ**1.

மன்றத்தீர்மான எண்.612 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

மார்த்தாண்டம் பேருந்து நிலையம் அபிவிருத்தி பணிகள் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒப்பந்ததாரர் கிளிட்டஸ் என்பவர் வைப்புத் தொகையினை கேட்டு வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண்.WP(MD)No.14280 of 2022 மேற்படி வழக்கினை நடத்திய வழக்கறிஞர் திரு.D. ஷாஜிகுமார் Counter Fees ரூ.5000/- கேட்டு செலவுப்பட்டியல் வரப்பெற்றது. மேற்படி தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்**.1651/2022/**இ**1.

மன்றத்தீர்மான எண்.613 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சியில் 2022-2023 நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP(MD)No.7325 of 2023. இந்நகராட்சி சார்பில் வாதாடிய திரு.D. ஷாஜிகுமார் B.A.,LL.B., வழக்கறிஞர் அவர்களிடமிருந்து Counter Fees ரூ.10,000/- வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்**.4882/2022/**இ**1.

மன்றத்தீர்மான எண்.614 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சியில் இரண்டு வருட சாதனை மற்றும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்த வகையில் கீழ்க்கண்ட பத்திரிக்கைகளுக்கு பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகையினை வருவாய் நிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பத்திரிக்கையின் பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | மாலை தமிழகம் | 15,330/- |
| 2. | மாலை முரசு | 11,340/- |

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.615 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பேருந்து நிலைய கடைகளான A7, A8, B14-க்கு திரு. எலியாஸ் என்பவரால் தலா 2,50,000/- வீதம் ரூ.7,50,000/- வைப்புத் தொகையாக செலுத்தியிருந்தார். பின்னர் கடை வழங்குவதில் தாமதம் ஏற்பட்ட நிலையில் அன்னார் வைப்புத்தொகையினை திரும்ப வழங்கிட கேட்டு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.WP(MD)No.10342, WP(MD)No.10343, WP(MD)No.10344/2014 முறையே வழக்கு தொடர்ந்த நிலையில் அவ்வழக்கின் உத்திரவில் கீழமை நீதிமன்றத்தினை நாடி பரிகாரம் தேடிகொள்ள தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் திரு. எலியாஸ் என்பவர் மேற்படி வழக்கின்படி உயர்நீதி மன்றத்தினை நாடமாட்டேன் எனவும், வயது முதிர்ந்த நிலையில் வாழ்வாதாரம் ஏதும் இல்லாத நிலையில் வைப்புத்தொகையை திரும்ப வழங்கிட கேட்டு பலமுறை மனு அளித்துள்ளார். மாவட்ட ஆட்சியரின் குறைதீர்க்கும் முகாம்களில் பலமுறை மனு அளித்துள்ளார். இந்நிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்தும் உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள நேரில் அறிவுறுத்தப்பட்டதின் பேரில் அப்போதைய வழக்கறிஞர் திரு. வாமனன் என்பவரிடம் கேட்டுக் கொண்டதில் வழக்கு சம்மந்தமாக திரு. எலியாஸ் என்பவர் இனிமேல் வழக்கு தொடர மாட்டேன் என்றும் வைப்புத்தொகை மட்டுமே வழங்குமாறும் உறுதி மொழி பத்திரத்தில் நோட்டரி சான்றொப்பம் பெற்றபின் நகர்மன்ற கூட்டத்தில் நகர்மன்ற உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று வழங்கலாம் என தெரிவித்ததின் அடிப்படையில் மனுதாரர் உறுதிமொழி பத்திரம் சமர்ப்பித்துள்ளார். எனவே திரு. எலியாஸ் என்பவருக்கு வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2503/2021/அ2.

மன்றத்தீர்மான எண்.616 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.11 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் குழாய்கள் மற்றும் வினியோக குழாக்ளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ரூ.6,00,000/- தயாரிக்கப்பட்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் 18-08-2023 அன்று முன் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 01-09-2023 அன்று கோரப்பட்டதின் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயசந்திரன் | 0.11% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந் ஒப்பந்தப்புள்ளியாக 0.10% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.P. ஜெயபிரகாஷ் கொடுத்துள்ளார். குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.:- நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2038/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.617 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.1 முதல் 10 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் குழாய்கள் மற்றும் வினியோக குழாக்ளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ரூ.6,00,000/- தயாரிக்கப்பட்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் 01-09-2023 அன்று முன் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 01-09-2023 அன்று கோரப்பட்டதின் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயசந்திரன் | 0.12% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக 0.10% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.P. ஜெயபிரகாஷ் கொடுத்துள்ளார். குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு.:- நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2039/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.618 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சி அலுவலகம் முன்புறம் உள்ள நகராட்சி கட்டிடத்தில் இரண்டு பழக்கடைகள் மற்றும் பேருந்து நிலையம் உள்ளது. மேற்கண்ட பழக்கடைக்கு வரும் வாடிக்கையாளர்களின் வாகனங்கள் மற்றும் Auto stand-ல் உள்ள வாகனங்கள் அலுவலக நுழைவு வாயில் முன்பு நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. எனவே நகராட்சி அலுவலகத்தின் நுழைவு வாயில் முன்பாக பொதுமக்கள் நலன் கருதி பாதுகாப்புவேலி அமைக்க வேண்டியது அவசியமாகும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,65,000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்த மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2398/2023/இ1

மன்றத்தீர்மான எண்.619 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN.75M.8752-க்கு நழுவு இயந்திர சிலிண்டர் மற்றும் சர்வீஸ் செய்த வகைக்கு கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு ரூ.4950/- தொகையினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2386/2019/இ1

மன்றத்தீர்மான எண்.620 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN.75J.8227-க்கு 2023-2024-ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு மேற்படி வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்யும் பொருட்டு வாகனம் ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு ரூ.1,42,000/- வரப்பெற்றுள்ளது. மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**2778/2012/இ1

மன்றத்தீர்மான எண்.621 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பணிகளுக்கு தேவையான கிருமிநாசினிகள் இருப்பு குறைவான நிலையில் உள்ளதாலும் மழைகாலங்களில் டெங்கு நோய் தடுப்பு பணிக்கு அதிக அளவில் பிளிச்சிங்பவுடர் தேவைப்படுகிறது. மேலும் குமாரசாமி தேசியநெடுஞ்சாலை வழியாக செல்வதால் அதற்காக சுண்ணாம்பு தூள் அதிகமாக தேவைப்படுகிறது. எனவே முறையே

| | |
|---|---|
| பிளிச்சிங் பவுடர் | - 5 டன் |
| சுண்ணாம்பு தூள் | - 10 டன் |

மேற்படி பொருள்கள் வாங்கிட உத்தேச செலவினமாக ரூ.3,00,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது-

அ.கு.:- நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.**3055/2021/H1.

மன்றத்தீர்மான எண்.622 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.12</u>

பொதுசுகாதாரம் இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கழிப்பிடங்களில் Flex மற்றும் விழிப்புணர்வு போர்டுகள், QR Code கலர் ஜெராக்ஸ் மற்றும் விழிப்புணர்வுகளுக்கு மைக் ஸ்பிரிங் சர்வீஸ் செய்த வகைக்கும், புகைபோக்கு இயந்திரங்களுக்கு பேட்டரி வாங்கியது, அலுவலக பயன்பாட்டிற்கு ரப்பர் ஸ்டாம் செய்தது மற்றும் புல் வெட்டும் இயந்திரங்களுக்குசர்வீஸ் செய்த வகைக்கும் ரூ.6230/- துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:-அத்தியாவசிய பணிகளுக்கு செலவுகள் மேற்கொண்டுள்ளதால் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு செலவின தொகை வழங்கலாம்.
**ந.க.எண்.**3256/2022/H1.

மன்றத்தீர்மான எண்.623 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சி பொது மக்களுக்கு மனித கழிவுகளை மனிதனே அகற்றுதல் தடைசட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அதன் கட்டணமில்லா சேவை எண்.14420 குறித்து தெரிவிக்க நகராட்சிகளின் இயக்குநர் மற்றும் மண்டல இணை இயக்குநர் ஆகியோரின் கணொலி காட்சி அறிவுரையின்படி வீடு வீடாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு ஏதுவாக தடுப்பு வாசகங்கள் பொருத்திய நோட்டீஸ்கள் அச்சிட்டு வழங்க ஏற்படும் செலவின தொகையை பொது நிதியின் கீழ் செலவிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.3049/2023/H1.

மன்றத்தீர்மான எண்.624 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.14

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவு நோய் தடுப்பு பணிகளுக்கு உண்டான புகைமருந்து இயந்திரம் Portable -3, Vehicle Mounted-1 என்ற நிலையில் உள்ளது. தற்சமயம் Portable இயந்திரம் 1 மட்டுமே இயங்குகிறது. தற்சமயம் மழைகாலமாக இருப்பதாலும், டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ள ஏதுவாகவும் இரண்டு சிறிய இயந்திரங்களும், பெரிய இயந்திரம் ஒன்றும் பழுதுபார்க்க ஏற்படும் செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1013/2018/H1.

மன்றத்தீர்மான எண்.625 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.15

குழித்துறை நகராட்சி 2022-2023-ம் நிதியாண்டின் வரி சீராய்வின் போது வரிவிதிப்புதாரர்களுக்கு Special Notice வழங்குவதற்கு அவசர அவசியம் கருதி தனியார் நிறுவனமான City Linewood Centre மற்றும் Dharshini Globol Nub என்ற நிறுவனம் மூலம் அச்சிடப்பட்ட வகைக்கு ரூ.36409/- நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை திரு. செந்தில்குமார் நகராட்சி ஆய்வாளர் அவர்களக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்**.969/2022/**அ**1.

மன்றத்தீர்மான எண்.626 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

I. மார்த்தாண்டம் பாரா உந்து நிலைய நவீன கழிவறையுடன் கூடிய கட்டண கழிவறை

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | செல்வமணி,<br>மருதங்கோடு. | 50,000/- | 51,000/- |
| 2 | ஜாண்ஜோஸ்வா,<br>சூரியகோடு | 50,000/- | 40,000/- |

II. மார்த்தாண்டம் பேருந்து நிலைய பழைய கடை 5

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | விஷ்ணு,<br>முளங்குழி, மார்த்தாண்டம் | 50,000/- | 5,500/- |
| 2 | டைட்டஸ்,<br>விளவங்கோடு | 50,000/- | 4,000/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் காணும் இனம் தற்போது புதிதாக குத்தகை விடப்பட்டுள்ளது.

வரிசை எண்.2-ல் காணும் இனம் 2022-2023-ல் ரூ.5000/-க்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது.

மேற்படி இனங்களுக்கு உரிமம் வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்**.3066/2023/**அ**2.

மன்றத்தீர்மான எண்.627 (1) அனுமதிக்கப்பட்டது.

(2) அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.17

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16-ல் சானல் சிறியகாட்டுவிளை ரோடு-2 உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து கழிவுநீர் சாலையில் செல்வதால் பொதுமக்கள் நலன் கருதி ரூ.2.60 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.606-ன்படி மன்ற ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.P. தேவதாஸ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.K.G. கிருஷ்ணதாஸ் | 6.15% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.02% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.P. தேவதாஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2062/2023/இ1.
மன்றத்தீர்மான எண்.628 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.18

குழித்துறை நகராட்சி வார்டு எண்.8-ல் இடைகுளம் முதல் கல்லுகெட்டி-2 சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்கண்ட சாலையை சீரமைக்க மதிப்பீடு ரூ.4,30,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. நகர்மன்ற தீர்மானம் எண்.599-ல் மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதால் 15-09-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.S. பாபு | 0.19% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.K.G. கிருஷ்ணதாஸ் | மதிப்பீட்டு விலை விகிதம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.K.G. கிருஷ்ணதாஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2060/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.629 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.19</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.5-ல் ஆர்.சி.தெரு மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட தெருவை கான்கிழீட் தளமாக அமைக்க ரூ.3,60,000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.602-ன்படி மன்றம் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 15-09-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.S. பாபு | 0.1% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.K.G. கிருஷ்ணதாஸ் | 0.35% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.1% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.S. பாபு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2064/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.630 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.20</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN75L0828-க்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கு என DERIK MOTORS(P) LTD., Nagercoil மூலம் ரூ.37,835/-க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கான பழுதுகளை நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடவும், மேலும் அரசு அங்கீகாரம் பெற்ற டெரிக் நிறுவனத்தின் பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1002/2012/இ1.

மன்றத்தீர்மான எண்.631 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.21</u>

குழித்துறை நகராட்சி வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து விடுதலை தந்தை பெயரியார் 145 ஆம் ஆண்டு பிறந்தநாள் மலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு ரூ.7500/- பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. எனவே வரபெற்றுள்ள பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.632 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.22</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.21 குலேசேகரம் சாலையில் யூனியன் பேங்க் முதல் எதிர்புறம் டிப்போ வரை உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் சாலையில் வழிந்தோடும் நிலையில் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் மற்றும் போக்குவரத்து நலன் கருதி மேற்கண்ட இடத்தில் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3.10 இலட்சம் தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2502/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.633 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.23</u>

குழித்துறை நகராட்சி அலுவலகம் முன்புறம் உள்ள நுழைவு வாயில் முன்பாக பொதுமக்கள் நலன் கருதி பாதுகாப்பு வேலி அமைக்க வேண்டியது அவசியமாகும். எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,65,000/- தயாரிக்கப்பட்டது. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி வழங்கி ஒப்பந்தப்புள்ளி 20-09-2023 அன்று பெறப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.V. பாலகிருஷ்ணன் | 0.11% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.S. பாபு | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.02% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.S. பாபு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2398/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.634 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.24</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.14 வடக்குதெருவிலிருந்து North Street Zion Church Road (Unicode 149014R068) சாலை குடிநீர் திட்ட பணி நடைபெற்றதாலும் மழை காரணமாகவும் மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் அச்சாலையின் இருபுறமும் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளது. எனவே பொதுமக்கள் நலன் மற்றும் போக்குவரத்து நலன் கருதி மேற்கண்ட சாலையில் இருபுறமும்

மழைநீர் வடிகாலை அமைத்து கான்கிரீட் தளம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.11.70 இலட்சம் தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2499/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.635 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.25

குழித்துறை நகராட்சி வார்டு எண்.20-ல் ஆர்.சி.தெரு சாங்கோ மெடிக்கல் ஸ்டோர் அருகில் உள்ள சாலை (Unicode 149020L076) மிகவும் பழுதடைந்து போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட பாதையை உத்தேச மதிப்பீடு ரூ.4,20,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2482/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.636 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.26

குழித்துறை நகராட்சி வார்டு எண்.7 பெருந்தெருவில் அமைந்துள்ள மீன்மார்க்கெட் மேற்கூரை பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட பழுதடைந்த கூரையை மாற்றியமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.1,10,000/- (ஒருஇலட்சத்து பத்தாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2497/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.637 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.27

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான காட்டுவிளை மேல்நிலை தொட்டி வளாகத்தில் மேற்கு புறம் உள்ள சுற்றுசுவர் இடிந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. எனவே OHT TANK மேற்கு புறம் புதியதாக சுற்றுசுவர் அடைக்க உத்தேச மதிப்பீடு ரூ.2.00 (இரண்டு இலட்சம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பாதுகாப்பு நலன் கருதி மேற்கண்ட பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2496/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.638 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.28</u>

குழித்துறை நகராட்சியில் தற்போது கீழ்கண்டவாறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

1) KNMT 2023-2024 திட்டத்தின் கீழ் ரூ.151 இலட்சத்தில் எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி
2) NUHM 2022-2023 திட்டத்தின்கீழ் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் நகர்புற சுகாதார நிலையம் அமைக்கும் பணி
3) SBM 2023-2024 திட்டத்தின்கீழ் MRF கட்டிடம் ரூ.26 இலட்சத்தில் நடைபெறுகிறது.
4) KNMT 2023-2024 திட்டத்தின்கீழ் புதியதாக தினசரி சந்தை அமைக்க ரூ.1460 இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.
5) பொதுநிதி 2023-2024 திட்டத்தின் கீழ் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

எனவே மேற்கண்ட திட்ட பணிகள் நடைபெற்று வருவதால் இந்நகராட்சியில் திட்டப்பணிகளை களப்பணி பார்க்க பணி ஆய்வாளர் இல்லாத காரணத்தால் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலமாக தொழிற்நுட்ப உதவியாளர் நிலை 2 (Technical Assistant Grade-II) பணி நியமனம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான மதிப்பீடு பொதுபணி துறை தரப்படுத்தப்பட்ட பட்டியல் (.PWD Schedule of Rate 2023-2024)ன்படி தொழிற்நுட்ப உதவியாளர் நிலை-II-ற்கு நாள் ஒன்றுக்கு ரூ.1096.00 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1096.00 x 365 நாட்கள் | = | 4,00,040 |
| GST 18% | = | 72,007 |
| 1% | = | 953 |
| மொத்தம் | | 4,73,000 |

(ரூபாய் நான்கு இலட்சத்து எழுபத்தி மூன்றாயிரம் ஆகும்.) மேற்கண்டவாறு பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.4,73,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2495/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.639 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.29</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.7-ல் குழித்துறை - ஆலஞ்சோலை சாலையில் ஆத்மாநிலையம் நர்சரி கார்டன் அருகில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் சாலையில் வழிந்தோடுகிறது மற்றும் அருகாமையில் உள்ள குடியிருப்புகளுக்கு செல்கிறது. எனவே அங்குள்ள பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட சேதமடைந்த மழைநீர் வடிகாலை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.2,50,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2500/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.640 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.30</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16-ல் கொடுங்குளம் சாலை 1 (Unicode 149015R073) சாலையில் உள்ள மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் மழைகாலங்களில் சாலையில் மழைநீர் வடிந்து செல்வதால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. மேலும் அங்குள்ள குடியிருப்புக்குள் மழைநீர் செல்லும் வாய்ப்புள்ளதாலும் பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.12,00,000/- (பன்னிரண்டு இலட்சம்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2501/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.641 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.31</u>

குழித்துறை நகராட்சியில் NUHM 2022-2023 திட்டத்தின்கீழ் புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து பணி உத்தரவு வழங்கி பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட சுகாதார நிலையம் கட்டிய இடத்தில் கூடுதலாக கட்டிடத்தின் பின்புறம் தடுப்புசுவர் மற்றும் Parerblock Pavement சுற்றுசுவர் மற்றும் குடிநீர் வசதி ஆகிய பணிகள் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை. எனவே தற்போது கட்டிட பணி நடைபெற்று முடிவுறும் நிலையில் உள்ளது. ஆகையால் கூடுதலாக தடுப்பு சுவர், சுற்றுசுவர், Parerblock Pavement மற்றும் குடிநீர் வசதி செய்ய வேண்டியுள்ளதால் உத்தேச மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கு

தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்**.2503/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.642 அரசின் நிதி பெற்று நடைமுறைபடுத்த அனுமதிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்.32</u>

குழித்துறை நகராட்சி கீழ்பம்மம் பகுதியில் புதிய MCC மற்றும் FSTP அமைந்துள்ள நிலையில் CCTV கேமரா நான்கு பொருத்தப்பட்டுள்ள நிலையில் தற்சமயம் அது பராமரிப்பு இல்லாமல் இயங்காமல் உள்ளது. உரிய பாதுகாப்பு நலன் கருதி அதனை இயக்க உத்தேச செலவினமாக ரூ.10,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்**.2540/2023/H1.

மன்றத்தீர்மான எண்.643 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.33</u>

கன்னியாகுமரி மாவட்டத்தில் "குப்பையில்லா குமரி" என்ற தலைப்பில் தமிழக அரசின் திட்டத்தில் ஒரு நகராட்சிக்கு ஒரு முன்மாதிரி வார்டு தேர்வு செய்து சர்வே செய்து அதில் கழிவுநீர் செல்ல உறிஞ்சுகுழி உரக்குழி அமைக்கப்பட்டுள்ளதை ஆய்வு செய்து அவ்வாறு இல்லாத வீடுகளுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் அறிவிப்பு கொடுத்து உரிய நடவடிக்கை எடுக்கவும், கழிவுநீர் குழாயை அப்புறப்படுத்தவும் அல்லது நிரந்தரமாக அடைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட அறிவிப்பு கொடுத்து காலக்கெடு முடிந்த வீடுகளின் கழிவுநீர் குழாயை நிரந்தரமாக அடைக்க உத்தேச செலவினமாக ரூ.3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
**ந.க.எண்**.2541/2023/H1.

மன்றத்தீர்மான எண்.644 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.34</u>

குழித்துறை நகராட்சி அலுவலகத்தில் இயங்கும் மெயின் box - extender web Camera logitech-C2704 ஆகிய சாதனங்கள் பழுதடைந்துள்ளதால் அவற்றை சரி செய்யவும், பொறியாளர் அறையில் உள்ள Moniter-ம் பழுதடைந்துள்ளதை சரி செய்யவும், பொறியாளர் அறையில் காணொலி மூலம் ஆய்வு கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக .Web Camera மற்றும் Speaker பழுது சரி செய்ய பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பிரிவு 15-ன்கீழ் Aashwin Computer என்ற நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் உத்தேச செலவினமாக ரூ.15,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:-1) நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற் கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**ந.க.எண்**.595/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.645 அனுமதிக்கப்பட்டது.